# NSW HEALTH

## COVID-19 Key Points – Wednesday 20 October 2021

**நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்-இலிருந்துவரும் 2021 அக்டோபர் 20-க்கான கோவிட்-19 பற்றிய முக்கிய குறிப்புகள்**

- நியூ சவுத் வேல்ஸ் முழுவதும், இப்போது 11.75 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன! 16 வயதுக்கு மேற்பட்ட மக்களில் 92.3% ஆனோர் தடுப்பூசியின் முதல் மருந்தளவு ஒன்றைப் பெற்றுள்ளனர், அத்துடன் 81.6% ஆனோர் இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.
- 12-15 வயதிற்குட்பட்டவர்களில் 75.5% ஆனோர், தடுப்பூசியின் ஒரு மருந்தளவைப் பெற்றுள்ளனர் மற்றும் 38.2% ஆனோர் இப்போது முழுமையாகத் தடுப்பூசியைப் போட்டுள்ளனர். நமது வயது வந்த மக்கள் தொகையின் அளவிற்கு, இந்த விகிதத்தை நாம் அதிகப்படுத்துவோம், அத்துடன் எங்கள் பள்ளிகளை முடிந்தவரை பாதுகாப்பாக வைத்திருப்போம்.
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 283 கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளனர். கவலைக்கிடமாக, ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.
- பரிசோதனையைச் செய்துகொள்வதற்காகத் தொடர்ந்தும் முன்வந்துகொண்டிருக்கும் உங்களுக்கு நன்றி கூறுகிறோம். எவ்விதமான நோயறிகுறிகள் இருக்கும் எவரும், அல்லது கோவிட்-19 உள்ள ஒருவருடன் நெருக்கமாக அல்லது தற்காலிகமாகத் தொடர்பில் இருக்கும் எவரும், நீங்கள் முழுமையாகத் தடுப்பூசியைப் போட்டிருந்தாலும்கூட, தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகி, உடனடியாகப் பரிசோதனையைச் செய்துகொள்வது தொடர்ந்தும் முக்கியமான ஒன்றாகவே இருந்துவருகிறது.
- வக வகா (கூரிங்கல் நீர்த்தேக்கம்) (Wagga Wagga (Kooringal catchment), வூல்கூல்கா (Woolgoolga) மற்றும் ஜெரில்டேரி (Jerilderie) உள்ளிட்ட, நோய்த்தொற்றாளர்கள் எவரும் அறியப்படாத பகுதிகளில் கழிவுநீரில் நோய்க்கிருமிகள் கண்டறியப்பட்டுள்ளமை குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம். இந்தப் பகுதிகளில் உள்ள அனைவரும், நோயறிகுறிகள் ஆரம்பிப்பதைக் கண்காணிக்குமாறு வலியுறுத்தப்படுகிறார்கள்.
- தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள பெரும்பாலான மக்கள், தடுப்பூசியைப் போட்டிருக்கவில்லை. நம்மைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் தடுப்பூசிகள் வகிக்கும் முக்கிய பங்கை இது மீண்டும் எமக்கு எடுத்துக்காட்டுகிறது.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளுவது, சுகாதார ஆலோசனையைப் பின்பற்றுவது, மற்றும் பரிசோதனையைச் செய்துகொள்ளத் தொடர்ந்தும் முன் வருவது போன்றவற்றில் நீங்கள் காட்டும் முனைப்புடன் கூடிய சிறந்த முயற்சிகளுக்கு நன்றி கூறுகிறோம்.
- நாங்கள் கோவிட் உடன் வாழும் நிலைக்கு மாறிக்கொண்டிருக்கும் வேளை, நாம் அதிக பரிசோதனை விகிதங்களைத் தொடர்ந்து பேணுவதும், எச்சரிக்கையாகத் தொடர்ந்து இருப்பதும், மற்றும் நோய்த்தொற்றாளர்களின் எண்ணிக்கையை முடிந்தவரை குறைவாக வைத்திருக்கும் வகையில் கோவிட்-இல் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான நடத்தைகளைக் கடைப்பிடிப்பதும் மிகவும் முக்கியமாகும்.
- எம்மையும், எமது அன்புக்குரியவர்களையும், பரந்த சமூகத்தையும் பாதுகாப்பதில் நம் அனைவருக்கும் ஒரு பங்கு உள்ளது, அத்துடன் எமது நடவடிக்கைகள் உயிர்களைக் காப்பாற்றக்கூடியவை.